"தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 34/1982) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றப்படி நிறைவேற்றப்பெற்றது.

(9) அரசினர் தீர்மானம்

(அ) விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 3 (V)-ல் இருக்கும் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 31/1982) வரிசையை மாற்றி, 3 (iii)-ஆக எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன் வடிவு, 1982

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலின்படி தமிழ்நாடு 1982 ஆம் பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டுமென்று தீர்மானத்திற்குப் பதிலாக மேற்படி சட்டமுன்வடிவை ஆய்வு செய்வதற்கு 24 உறுப்பினர்கள், (16 சட்டமன்ற பேரவை